
Not for sale

செப்டம்பர் - அக்டோபர் 2009

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




# வேதத்தை வாசிப்பது எப்படி

வேதம் வாசிப்பதன் நோக்கம்? • வசனம் மற்றும் கருப்பொருள்

வரலாறும் அறிவியலும் • கற்றவைகளை நடைமுறைபடுத்துதல்

வேதத்தை வாசிப்பது எப்படி?

# ஆதியிலே



"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." - 11தீமோத்தேயு 3:16,17

**நா**ம் நம் குணநலன்களை சரி செய்து கொள்வதற்கும் கிறிஸ்துவ செயல்பாடுகளை திருத்தி சீரமைத்து கொள்வதற்கும் வேதத்தைபடிக்க வேண்டும். வேதத்தை படித்து அதிலுள்ளவற்றை செயல்படுத்தாதே போனால், காலத்தை வீணாக்குவதை விட மோசமானதாக இருக்கும். ஆதலால் நம் முதல் பாடம் *வேதம் வாசிப்பதன் நோக்கம்* என்பதேயாகும். வேதத்தைபடித்து புரிந்து கொள்வதற்கு ஆறு முறைமைகள் உள்ளன. மாணவர்களுக்குரிய மூன்று முறைமைகளாவன -

* வேத வசனங்கள் கூறுவது என்ன ?

*வேதத்தில்முன்னும் பின்னும் கூறப்பட்டுள்ள காரியங்கள் ஒரே சீராக அமைவது எப்படி ?

* வசனத்தோடு தொடர்புள்ள காரியங்கள் என்ன கூறுகின்றன ?

வேத வசனங்களில் புலமைபெறுவதற்கான மூன்று முறைமைகள் -

* வரலாறு, தொல்பொருள் ஆராய்ச்சி அல்லது அறிவியல் உதவுகின்றனவா ?

* KJV மொழிபெயர்ப்பைக் காட்டிலும் பழைய வேதாகம சுருள்கள் சரியான, தெளிவான வசனங்களுடன் காணப்படுகின்றனவா ?

*கிரேக்கம் அல்லது எபிரேய பதிவுகளை காட்டிலும் வேறு சரியான மொழிபெயர்ப்பு உள்ளதா ? ஒரு சில வேத வசனத்தின் பகுதிகளே புலமைக்கேற்ற பகுதிகளாய் காணப்படுகின்றன. பொதுவாக மற்ற எல்லா வசனங்களும் மாணவர்களுக்குரிய முறைமைக்கேற்றவாறு தொகுக்கப்பட்டுள்ளன.

அடுத்து வரும் பகுதிகளில் வேதத்தைஎப்படி படிக்கலாம், அதனை எப்படி செயல்படுத்தலாம் என்ற காரியங்களை அலசுகின்றது. வசனம் மற்றும் அதன் கருப்பொருள், வரலாறு மற்றும் அறிவியலோடு ஒப்பிட்டு படிப்பதின் பயன்பாடுகள் மற்றும் பழைய புஸ்தக சுருளிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பயன்பாடுகள். இந்த பாடங்களில் விசேஷமான ஆராய்ச்சிக்கு அநேக முறைமைகள் கொடுக்கப்பட்டிருப்பினும் எல்லாவற்றையும் நாம் மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. எந்த ஒரு தனிப்பட்ட வேதாகம ஆராய்ச்சி முறை எல்லாவற்றிற்கும் பொருந்த பலனளிக்கும் என்கிற முடிவிற்கும் நாம் வந்து விடக் கூடாது. வசனத்தின் கருப்பொருளை உணர்ந்து படித்தல் என்ற அடிப்படையில் 11பேதுரு -ல் இடம் பெற்றிருக்கும் ஒவ்வொரு உலகமும் வானங்களும், பூமியும் என்றவாரே தொகுக்கப்பட்டுள்ளன. ஆனால் பூமி அப்படியே புதிய உலகின் வரவிற்காக காத்திருக்கும் என்பதாக தகவலளிக்கின்றன. ஒத்தவாக்கியங்கள் சரியான முறையில் வேதத்தை படிப்பது என்பதை கண்டுப்பிடிப்பதோடு மட்டுமல்லாமல் அதை எப்படி வாழ்க்கையில் செயல்படுத்துவது என்பதற்கும் உதவுகின்றது.

இறுதியாக, வேதத்தில் படித்த காரியங்களை எப்படி செயல்படுத்துவது என்ற முக்கியமான முறையை குறித்து விளக்கியிருக்கின்றது.

## செப்டம்பர்/அக்டோபர்

**ஆதியிலே** (வேதத்தை வாசிப்பது எப்படி?)...


**வேதம் வாசிப்பதன் நோக்கம்.......** 2
"நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளை செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்." இது வெறும் அறிவு சார்ந்த தூண்டுதல் அல்ல.

**வசனம் மற்றும் கருப்பொருள்.......** 5
இது கூறுவது என்ன ? இது எப்படி பொருந்தி வருகிறது ?

**கற்றவைகளை நடைமுறைப்படுத்துதல்..** 9
தேவனுடைய வார்த்தைகளை கேட்பவர்களாக மாத்திரமல்ல, அதன்படி நடப்பவர்களாகவும் இருங்கள்.

**வரலாறும் அறிவியலும்.......**
சிருஷ்டிகர் எப்பொழுதும் ஜீவிக்கிறார் - ஜீவிப்பவராகவும் இருப்பார். 13

**தீர்க்கதரிசனத்தில் இன்று .......** 17

நம்முடைய தெரிந்துகொள்ளுதலை உறுதிப்படுத்தல்

# வேதம் வாசிப்பதன் நோக்கம்



"நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்." -யோவான் 13: 17

O.B.Elbert

பொதுவாக நாம் எழுதும்பொழுதும், பேசும் பொழுதும், நாம் நிரூபிக்க விரும்பும் காரியங்களுக்கு, படிப்படியாக ஆதாரங்களை திரட்டின பின், நாம் முடிவுரையை சமர்ப்பிக்கிறோம். ஆனால் இந்த பாடத்திற்கு முடிவை முதலில் நாம் இங்கு கொடுக்கிறோம் - நாம் தேவனோடு ஒன்று சேருவதே, வேதத்தைபடிப்பதின் உள்நோக்கமாகும். வேதாகமத்தின் போதனைகள் நம்மை நல்வழிநடத்தி, நமக்குள் மாற்றங்களை ஏற்படுத்தி, நம்மை பெலப்படுத்தி, தேற்றுகிறது "வேதவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது." (ரோமர் 15:4)

நிச்சயமாக, இயற்கையாக ஆர்வமுள்ளவர்களை திருப்திப்படுத்தும்படிக்கு அநேக காரியங்கள் வேதாகம படிப்பில் காணப்படுகிறது. இதில் அதிகமாக மனபயிற்சிக்கு தேவையான ஊக்குவித்தலையும் மற்றும் மனநிறைவையும் இதன் மூலம் நாம் கண்டடையலாம். தீர்க்கதரிசனம், வரலாறு, அரசியல், ஆன்மீகம், சட்டம் மற்றும் கவிதைகள் போன்ற சகலமும் அதிகமான அளவிலும், ஆழமான அர்த்தங்களை உடையதாகவும் வேதத்தில்காணப்படுகிறது. ஆகவே வேதாகம படிப்பில் நாம் அறிந்துகொள்ளும் காரியங்களை காட்டிலும், அளவுக்கு அதிகமாக தெரிந்துகொள்ளவேண்டியதும் இன்னும் ஆர்வமூட்டும் காரியங்கள் அதிகமாக உள்ளது.

பயபக்தியோடு நாம் வேதத்தைபடித்து, தனிப்பட்ட முறையில் நாம் அதை நம்முடைய வாழ்க்கையில் நடைமுறை படுத்துவதற்கு நாம் படிப்படியாக முயற்சிக்கும்பொழுது நிச்சயமாக தேவனுடைய தெய்வீக சுபாவம் படிப்படியாக நமக்கு வெளிப்படுத்தப்படும். இவ்விதமான வேத படிப்புகள் நம்மை தேவனிடத்தில் நெருங்கிடச் செய்து, நம்முடைய சிந்தை" புதிதாகிறதினால் மறுரூபமாக்கப்படுகிறோம்" (ரோமர் 12:2)

வேதத்தைபடிப்பதற்கு நாம் பெற்ற வாய்ப்பு மிக விலையுயர்ந்ததாகும். மேலும், நாம் படிப்பதை புரிந்துகொண்டு தேவனுடைய சித்தங்களை அறிந்துகொள்வது அதை காட்டிலும் விசேஷித்ததாக இருக்கிறது - "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு 13:16,17)

## தேவன் யாருக்கு அறிவை வெளிப்படுத்துவார் ?

முதன்மையாக, தேவனுக்கு நன்றி செலுத்தாமல், அவருடைய ஆசீர்வாதங்களுக்காக வேதத்தைபடிக்க முயற்சிப்பது பயனற்றதாக இருக்கும். மனித ஞானமும், கடுமையான முயற்சிகளும் வேதத்தைபுரிந்துகொள்வதற்கு உண்மையான திறவுகோல்களாக இருப்பதில்லை. தேவன் மேல் உண்மையான விசுவாசமுள்ளவர்களுக்கு மட்டுமே, வேதத்தின் ஆழமான காரியங்கள் வெளிப்படுத்தப்படுகிறது - "எழுதியிருக்கிறபடி - தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை, நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார், அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான் ? அதைப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். "(1கொரிந்தியர் 2:9-12) என்று எழுதியிருக்கிறது. நாம் பெற்றிருக்கும் சத்தியத்திற்கு ஏற்றவாறு நாம் செயல்முறையில் வெளிப்படுத்தும் விசுவாசத்தின் அளவிற்கு தகுந்தபடி நாம் மேலும் அதிகமாக, இந்த வேதாகமத்தை புரிந்துகொள்ளமுடியும் என்பது வசனங்களில் உள்ள ஒரு முக்கியமான கோட்பாடாகும் - "புத்திமதியைத் தள்ளிவிடுகிறவன் தன் ஆத்துமாவை வெறுக்கிறான்,

கடிந்துகொள்ளுதலைக் கேட்கிறவனோ ஞானமடைவான்." (நீதி 15:32)

பவுல் தீத்துவுக்கு எழுதும் நிருபத்தில் துவக்க குறிப்பாக இந்த கோட்பாட்டை உறுதிபடுத்தியிருக்கிறார் - "தேவனுடைய ஊழியக்காரனும், இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய பவுல், பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது ..." (தீத்து 1:1)

சங்கீதக்காரனும் இந்த கோட்பாட்டை ஏற்றுக்கொள்கிறார் -"கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார், ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார். சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார். கர்த்தருடைய உடன்படிக்கையையும் அவருடைய சாட்சிகளையும் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, அவருடைய பாதைகளெல்லாம் கிருபையும் சத்தியமுமானவைகள்..." (சங்கீதம் 25:8-10)

வேதத்தில்சொல்லப்படுகிற தேவனுடைய சித்தத்திற்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்கிறோம். நம்மில் ஒரு உருமாற்றம் ஏற்படுத்தும் அளவிற்கு, அவருடைய சித்தம் நமக்குள் செயல்படுகிறது. ஆகவே, நாம் படிக்கும் தேவனுடைய வார்த்தைகள், கண்ணாடியில் நாம் முகம் பார்ப்பதற்கு ஒப்பிட்டு யாக்கோபு குறிப்பிடுகிறார். ஒருவர் கண்ணாடியில் தன்னுடைய முகத்தை பார்க்கும்பொழுது, ஒருவேளை தன்னுடைய தலைமுடியை சரிசெய்யவேண்டும் என்பது தெரிகிறது அல்லது தேவையற்ற ஏதோ ஒன்று முகத்தில் ஒட்டிகொண்டிருப்பதை துடைக்கவேண்டும் என்பது தெரிகிறது. அதேபோல நாம் வேதாகமத்தை வாசிக்கும்பொழுது நம்முடைய பேச்சு, செயல் மற்றும் சிந்தையில் இருக்கும் தவறுகளை திருத்தவேண்டிய காரியங்களை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

"...அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான், அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான். " (யாக்கோபு 1:22-25)

நாம் கற்றுகொண்டபடி வாழவேண்டும் என்பதை சங்கீதம் 119ம் அதிகாரத்தில் உள்ள விமர்சனம் வெளிப்படுத்துகிறது. "..உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன், நாள்முழுதும் அது என் தியானம்..." - சங் 119:97

"தேவனுடைய வார்த்தைகளை படிப்பதற்கு கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட மாபெரும் பாக்கியமாக இருப்பினும், அநேக வேதபடிப்புகள் பயனற்றதாக இருக்கிறது. தினசரியான வாழ்க்கையில் செயல்முறைபடுத்தாத வேதபடிப்புகள், நேரத்தை வீணாக்குவதை காட்டிலும் மோசமானதாக இருக்கும்.... தேவனுடைய ஜனங்கள், ஒவ்வொரு காரணமுள்ள வாய்ப்புகளையும், தெய்வீக திட்டத்தின் அறிவை பெற்றுகொள்வதற்கு பயன்படுத்தவேண்டும் - இதை பலிசெலுத்தியாவது பெற்றுகொள்ளவேண்டும் - *Reprints,* p. 2488

வேதாகம படிப்பை மிக சிறப்பான ஒரு பொக்கிஷமாக நாம் ஏன் கருதவேண்டும் ? "தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் காருண்ணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." (11பேதுரு 1:2-4)

"இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்...." (1பேதுரு 1:12) என்பதை ஞானம் நிறைந்த விசுவாசமுள்ள ஒரு கிறிஸ்தவர் மிக சரியாக புரிந்திருப்பார். தேவனுடைய ஞானம்-வருங்காலத்தை குறித்த தீர்க்கதரிசனங்களையும், கடந்த காலம் மற்றும் நிகழ் காலத்தை குறித்த காரியங்களையும் உண்மையாகவே அறிவிக்கிறது. ஆனால் "எந்த மனுஷனையும் இரட்சிக்க மத்தேயு ஐந்தாம் அதிகாரத்தில் உள்ளவைகள் போதுமானது" என்று சில மதியீனமான தேவனுடைய பிள்ளைகள் தங்களுடைய அறியாமையினாலே கருதுகின்றார்கள். "வருங்காலத்தை குறித்து அறிந்துகொள்ள ஆர்வமுள்ளவர்களை திருப்திபடுத்த மட்டுமே

தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நாம் கருத்தில் கொள்ளக்கூடாது. தேவனுடைய பிள்ளைகளாக இருப்பவர்களுக்கு தங்களுடைய தந்தையின் திட்டங்களை அறிந்துகொள்வதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கிறது. மேலும், தேவனுடைய கண்ணோட்டத்திலிருந்து நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் நோக்கிபார்த்து, அவருக்கு இசைவாக உற்சாகத்துடன் செயல் படுவதற்கே இவைகள் முன் அறிவிக்கப்படுகிறது. இப்படியாக, தேவனுடைய வேலைகளை செய்ய உற்சாகமுள்ளவர்கள், நல்ல ஆவியோடும், புரிந்துகொள்ளுதலோடும், ஒரு ஊழியக்காரனாக மட்டும் அல்லாமல், இயேசுவுக்கு பங்காளிகளாகவும், தேவனுடைய புத்திரராகவும் செயல்படுவார்கள். இனி வரும் காரியங்கள் நிகழ்காலங்களில் எதிரிடையாக தோன்றினாலும், வெகு ஜாக்கிரதையான வேத படிப்புகள் மட்டுமே நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்தி, நம்மை பரிசுத்தமடைய செய்யும்." - The Divine Plan of the Ages, p.13

## வேதாகமத்தைப் படிப்பதின் உள்நோக்கம்

"ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது, நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. " (யோவான் 6:63) என்று இயேசு சொன்னார். நம்முடைய வேதாகம படிப்பின் உள்நோக்கம் - நம்முடைய ஜீவனுக்கான தேடுதல் என்றும் சொல்லலாம். இயேசு நம்முடைய சார்பில் ஏறெடுத்த அருமையான ஜெபத்தில் இந்த தெய்வீக சத்தியம் மற்றும் ஜீவனுக்குமுள்ள முக்கியமான தொடர்பை குறித்து காணலாம் -"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன். "(யோவான் 17:3)

நித்திய ஜீவனை பெறும் நோக்கத்தை பற்றி இயேசு சொன்ன விளக்கம் மிக அழகாகவும், எழுச்சியூட்டக்கூடியதாகவும் இருக்கிறது. சபையினருடைய உள்ளான நோக்கத்தையும் உணர்வுகளையும் தாவீது பக்தன் மிக அற்புதமான ஒரு தீர்க்கதரிசனமாக உரைத்திருக்கிறார் - "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்." (சங் 27:4)

நாம் வேதத்தைஒரு உள்நோக்குடன் படிக்கின்றோம். நம்முடைய வாழ்க்கையில் இது மிக முக்கியமானதொன்றாக இருக்கிறது. நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம். (11பேதுரு 1:10) நன்றியறிதலான ஜெபத்தோடு, அவருடைய வார்த்தைகளை ஆராய்ந்து அதை தியானம் பன்னி, நடைமுறை வாழ்க்கையில் கடைபிடித்தோமானால், நம்முடைய நீண்ட நாள் வாழ்க்கை பிரயாணத்தில் நம்மை பெலப்படுத்தி, இறுதியில் நித்திய ஜீவனை பெறுவோம். இப்படியாக, நமக்குள் இருக்கும் நம்பிக்கைக்கும், நம்மை ஜீவனுக்குள் நடத்தும் பரலோக அப்பமும், நாம் வழியில் தடுமாறிவிடாதபடிக்கு நம்முடைய பாதையில் வீசப்படும் வெளிச்சமும், பரலோகத்திற்கு நாம் பயணிக்கும் வழியில் நம்முடைய அனைத்து துக்கங்களுக்கேற்ற மருந்தையும் வேதவசனங்கள் மட்டுமே தருகிறது.

வித்தியாசங்களை உண்டுபண்ணும் வார்த்தைகள்

# வசனம் மற்றும் கருப்பொருள்



நீ வாசித்திருக்கிறது என்ன ? - லூக்கா 10 : 26

Ernest Kuenzli

**வே**தத்தில் அநேக காரியங்கள் அடையாளங்களாகவும், உவமைகளாகவும், மறைமுகமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதலால் வேதம் என்ன சொல்ல வருகின்றது என்பதை சரியான முறையில் புரிந்து கொள்வதென்பதே ஒரு பெரிய சவாலாக இருந்து வருகின்றது. பரிசுத்த வேதத்தைபுரிந்து கொள்வதற்கு அதை மிகவும் கவனமாக படிக்க வேண்டும் அது என்ன சொல்லுகின்றது என்பதிலும், என்ன சொல்லவில்லை என்பதிலும் கவனமாக இருக்கவேண்டும். மேலும், வசனத்தின் கருப்பொருளை புரிந்து கொள்வதற்கு கவனம் செலுத்த வேண்டும். இந்த மூன்று காரியங்களையும், நாம் செய்ய தவறுவோமானால் தேவன் அவருடைய ஜனங்களோடு தொடர்பு கொள்கிறார் என்ற சத்தியத்தை குறித்த ஓர் தெளிவற்ற முடிவுக்கு வரநேரிடும்.

## வசனம் என்ன சொல்ல வருகின்றது ?

வேதத்தைபுரிந்து கொள்வதற்கான முதல் படியாக வேத வசனம் என்ன சொல்ல வருகின்றது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். ஆதியாகமம் 2:7 ம் வசனம் மேற்சொல்லப்பட்ட கருத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊதினார் மனுஷன் ஜீவாத்துமாவானான்" மனிதனுடைய ஆத்துமா அழியாது, என நம்பிக்கொண்டிருக்கின்ற அநேக ஜனங்கள் இந்த வசனத்தை வாசிக்கும் போது கூட அந்த வசனம் என்ன சொல்லுகின்றது என்பதை புரிந்து கொள்வதில்லை. "மனுஷன் ஜீவாத்துமாவானான்" என்று பொருள் இல்லை, மாறாக, மனிதனே ஆத்துமா என்பதையும், இது எபிரேய வார்த்தையான நெப்பேஷ் -ன் மொழிபெயர்ப்பு என்பதை புரிந்து கொள்ள தவறுகின்றனர். மனித சரீரம் தேவன் கொடுக்கும் சுவாசிக்கும் தன்மையுடன் ஒருங்கிணைந்து ஆத்துமாவாகின்றது. மனிதன் பறவைகள், மீன்கள் மற்றும் மிருகங்களை போல ஓர் ஆத்துமா என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். (ஆதி 1:24, 2: 19) இந்த வசனம் எசேக்கியேல் 18 :4 ல் சொல்லப்பட்டுள்ள கருத்தோடு ஒத்துபோகின்றது. "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்" ஆதலால் வேதத்தைகவனத்துடன் படிப்பதே, அதை சரியாக புரிந்து கொள்வதற்கான முதல் படியாகும்.

## வசனம் குறிப்பாக என்ன சொல்லவில்லை ?

வேதத்தைபுரிந்து கொள்வதற்கான இரண்டாம் படியாக வசனம் குறிப்பாக என்ன சொல்லவில்லை என்பதில் தெளிவாக இருக்கவேண்டும். நாம் நினைக்கின்ற படி வசனம் சொல்லவில்லை என்பதை கவனிப்பதற்கு முன்பே இதை தான் சொல்கின்றது என்ற முடிவிற்கு தாவி விடுகின்றோம். லேவி 16 ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள பாவ நிவாரண நாள் இதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. சிலர் பாவநிவாரண நாளன்று பிரதான ஆசாரியர் வெளியே வந்து ஜனங்களை ஆசீர்வதிக்கின்றார் என்று நம்புகின்றனர். ஆனால் லேவி 16ம் அதிகாரத்தில் இது நடைபெற்றதாக ஒன்றும் சொல்லப்படவில்லை. பிரதான ஆசாரியர் லேவி 9 ம் அதிகாரத்தில் ஜனங்களை ஆசீர்வதிக்கின்றார் என இடம் பெற்றுள்ளது ஆனால் இது முற்றிலும் வேறு நிகழ்ச்சி, இதிலிருந்து நாம் என்ன முடிவிற்கு வரவேண்டும் ? கிறிஸ்து மற்றும் சபையின் மூலமாக வரும் பாவ நிவாரண பலியின் ஆசீர்வாதங்கள் நிழலாக லேவி 9ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது ஆனால் லேவி 16ம் அதிகாரத்தில் கொடுக்கப்படவில்லை. வேதம் தெளிவாக என்ன கூறவில்லை என்பதை புரிந்து கொண்டால், வேதம் உண்மையில் என்ன சொல்ல வருகின்றது என்பதை தெளிவாக புரிந்துக்கொள்ளலாம்.

## வேதத்தின் கருப்பொருள்

"கருப்பொருள்" என்றால் என்ன ? வெப்ஸ்டர் என்பவர் கருப்பொருளை குறித்து விளக்குகையில் கருப்பொருள் என்றால் ஒரு வார்த்தை அல்லது வசனத்தின் விளக்கங்களின் மேல் கூடுதல் வெளிச்சம் கொடுத்து, அதன் அர்த்தத்தை தெரியப்படுத்துகின்றது. வேதாகம கருப்பொருள் விளக்கங்களில் எல்லா பகுதியையும் அலசி அதில் எழும் கேள்விகளுக்கும் பதிலளிக்கின்றது. அது மாத்திரமல்லாமல், வசனத்தின் கருப்பொருளாவது வாசிக்கின்றவர்கள், விளக்கங்கள் எடுத்துக்கொள்ளும் கால அளவு மற்றும் அதை எழுதினவரின் முடிவையும் உள்ளடக்கியுள்ளது. இத்தகைய அனைத்து அம்சங்களும் வேதமாணாக்கரை வேதத்தைசரியான முறையில் புரிந்துகொள்ளும்படி செய்யும்.

## ஆரம்பத்திலிருந்தே துவங்க வேண்டும்

வேதத்தைவாசிக்கையில் தொடர்ந்து எழும் தவறுகளில் ஒன்று - ஒரு வசனத்தை வாசிக்கையில் எழும் கேள்விக்கு முன்பாக அதை எழுதியவர் முதலில் என்ன சொன்னார் என்பதை கவனிக்காததே காரணமாகும். வேதத்தின் எந்த பகுதியைக் குறித்தும் ஒரு மதிப்பீட்டிற்கு வருவதற்கு முன்பு அதன் ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்ட வசனம் வரையிலும் உள்ள காரியங்களை ஆய்வு செய்தல் அவசியம். இதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு - "இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும், அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்." (11பேதுரு 3:7,10)

இந்த வசனங்களை வாசிக்கின்ற ஒருவர் எளிதாக தேவன் கண்ணுக்கு தெரிகின்ற பூமியை அழிக்கப் போகிறார் என்ற முடிவிற்கு வரக்கூடும். ஆனால் இந்த வசனம் இடம் பெற்றிருக்கிற அதிகாரத்தின் துவக்கத்தை வாசிக்கையில் இவ்வசனத்தில் இடம்பெற்றிருக்கும் வானங்களும் பூமிகளும் என்கிற வார்த்தைகள் அடையாளமாக பயன்படுத்தப் பட்டுள்ளதை தெரிந்துக்கொள்ளலாம். பேதுரு இதில் குறிப்பிட்டிருக்கும் வானங்கள் தற்போதைய மதம் மற்றும் சமுதாய அமைப்பிற்கு அடையாளமாக குறிப்பிட்டிருக்கின்றார். ஆறாம் வசனத்தில் பேதுரு ஜலப்பிரளயத்திற்கு முன்பாக இருந்த உலகத்தை "அப்போதிருந்த உலகம்" என்று குறிப்பிடுகிறார் - இதுவே முதலாம் வானம் மற்றும் பூமியுமாகும். இந்த வார்த்தைகள் கிரேக்க வார்த்தையான "காஸ்மோஸ்" என்பதன் மொழியாக்கம். இதுவே வசனம் ஆறில் "உலகம்" என்று இடம் பெற்றிருக்கின்றது. இந்த ஒரு அமைப்பு ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்பட்டது. நோவா மற்றும் அவருடைய குடும்பம் மட்டுமே காப்பாற்றப்பட்டது. இதை இப்போதிருக்கிற வானங்களும், பூமிகளும் என்று இடம் மாற்றம் செய்தன. இதை இரண்டாம் "காஸ்மோஸ்" என்றும் உலக அமைப்பு என்றும் அழைக்கலாம்.

இந்த இரண்டாம் வானங்கள் மற்றும் பூமிகள், 7 ம் மற்றும் 10ம் வசனங்களில் இடம்பெற்றுள்ளது. மூன்றாம் "காஸ்மோஸ்" அல்லது உலக அமைப்பு இடம் மாற்றத்தை பேதுரு இவ்வாறாக கூறுகிறார் - "அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்." 11பேதுரு 3:13. இந்த ஒரு வசனத்தின் கருப்பொருளை குறித்து விளக்கவேண்டுமானால் பேதுரு நேரடியான அர்த்தத்தில் எடுக்கப்படும் வானங்களும் பூமிகளும் அழிக்கப்படும் என்று கூறுவில்லை. ஆனால் அவைகள் அடையாளப்படுத்தும் தற்போதைய உலக அமைப்பையே குறிப்பிட்டிருக்கிறார். இவைகள் மூன்றாம் வானம் மற்றும் பூமி அல்லது கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சி இடமாற்றம் செய்யும்.

## வாசிக்கின்றவர்களின் காலத்தின் அடிப்படையை கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

வேதத்தை வாசிக்கையில் ஏற்படும் மற்றுமொரு தவறு என்னவென்றால் வாசிக்கின்றவர்களின் காலத்தின் அடிப்படையை கருத்தில் கொள்ளாததேயாகும். நாம் ஒரு வசனத்தை நேரடியாக வாசிக்கையில் அந்த வசனமே நமக்குரியதான நேரடியான அர்த்தமாக எடுத்துக்கொள்கின்றோம். வேதம் நமக்கே பேசப்பட்டதாயிருப்பினும் எழுதப்பட்ட அல்லது பேசப்பட்டுள்ள காரியங்கள் கடந்த காலங்களில் வேறுப்பட்ட கலாச்சாரத்தில் வாழ்ந்த ஜனங்களுக்கு பேசப்பட்டிருக்கின்றன என்பதை தெளிவுப் படுத்திக் கொள்ள வேண்டும். அந்த வசனங்கள் யாருக்கு எழுதப்பட்டுள்ளது என்பதை நன்றாக தெரிந்து கொண்டால் மாத்திரம் தான் அந்த வசனத்தில் முழு அர்த்தத்தை முழுமையாக புரிந்துக் கொள்ள முடியும். இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக, பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானுக்கு முன்பாக இயேசு மறுரூபமான காட்சியை எடுத்துகொள்ளலாம் - "அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார், அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது. அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று. அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள். அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி- ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது, உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றார். அவர் பேசுகையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று." (மத்தேயு 17: 2-5)

மோசே மற்றும் எலியா இந்த மறுரூப காட்சியில் இடம் பெற்றிருக்கும் காரணம் என்ன? அவர்கள் யாரை

அடையாளப்படுத்தினர் ? சீஷர்கள் இயேசுகிறிஸ்துவிடம் அவர்களின் பிரசன்னத்தை குறித்து எதையும் கேட்கவில்லை என்ற போதிலும் பேதுரு அவர்களின் பிரசன்னத்தை கனம் பண்ணும் பொருட்டு அவர்களுக்கு கூடாரத்தை உண்டுபண்ணும்படிக்கு கேட்டார். இயேசு அவர்களின் பிரசன்னத்தை குறித்து சீஷர்களுக்கு எந்த விளக்கமும் கொடுக்கவில்லை. எப்படியாயினும் இந்த காரியங்களைக் பார்த்துக்கொண்டிருந்த சீஷர்களை எடுத்துக் கொள்வோமானால் அந்த மறுரூபகாட்சியில் இடம் பெற்றிருந்த மோசேவும், எலியாவும் யாரை அடையாளப்படுத்துகின்றனர் என்ற முடிவிற்கு வந்துவிடலாம்.

மறுரூப காட்சியில் இயேசுகிறிஸ்து மேசியாவாக மகிமையில் தம்மை வெளிப்படுத்தினார். அவர் முகம் சூரியனை போல பிரகாசித்தது அவருடைய வஸ்திரம் வெண்மையாக பிரகாசித்தது. திரைக்கு பின்னால் மெல்கிசெதேக்கின் முறைமையில் வரும் பிரதான ஆசாரியருக்கு அடையாளமாக தம்மை வெளிப்படுத்தினார். தரிசனத்தில் மோசேவும், எலியாவும் இயேசுகிறிஸ்துவோடு பேசிக்கொண்டிருப்பது எதை அடையாளப்படுத்துகின்றது ?

சீஷர்கள் அந்த காட்சியை கண்டவுடன் மோசே நியாயப் பிரமாணத்தின் உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராக அதனோடு சம்பந்தப்பட்டவராக எடுத்துகொண்டிருக்க வேண்டும். எலியா தீர்க்கதரிசியுடன் சம்பந்தப்பட்டவராக அவர்கள் எடுத்துக்கொண்டிருக்க வேண்டும். தரிசனத்தில் சீஷர்கள் மோசேவும், எலியாவும் ஒன்றாக இருந்தது நியாயப் பிரமாணம் மற்றும் இயேசு கிறிஸ்து மேசியாவாக வரப்போவதை முன்னறிவிப்பதை எடுத்துரைக்கின்றதை வெளிப்படுத்தியது. (உபா 18:15-19)இந்த தரிசனத்தின் மூலம் இதே பாடத்தை இயேசு நமக்கு விளக்குகின்றார்.

## கால நிர்ணயம் என்றால் என்ன ?

வசனங்களை எழுதினவர் எந்த காலத்தின் வாசகர்களை மனதில் வைத்துக் கொண்டு எழுதினார் என்பதை புரிந்துகொள்ள மறுப்போமானால் வேதாகம வசனங்களை தவறாக புரிந்துகொள்ள நேரிடும். இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை கவனிப்போம் - "..இன்று என்னோடு கூட பரதீஸில் இருப்பாய்..." (லூக்கா 23:43) இந்த வசனத்தை கொண்டு தனிப்பட்ட நபர்கள் மரித்த பின்பு நேரடியாக பரலோகம் செல்கின்றனர் என்று கூறுகின்றனர். இந்த வசனம் நிறுத்தற் குறி கண்டுபிடிப்பிற்கு முன்பாக எழுதப்பட்டது. "இன்று" என்ற வார்த்தை குறித்தான விளக்கங்களை நாம் ஆராய்வோமானால் - (1) இந்த வசனத்தை இயேசு எப்போது கூறினார் என்று கவனிக்க வேண்டும். (இன்று நான் உனக்கு சொல்லுகிறேன் என்பதாக மொழிபெயர்ப்பு இடம் பெற்றிருக்க வேண்டும்) அல்லது (2) எப்போது இயேசு கிறிஸ்துவும் கள்ளனும் ஒன்றாக பரதீஸில் இருக்கக் கூடும்? அநேகர் இந்த நிறுத்தற் குறியீடுகள் வேதத்தில்இடம்பெறாமல் இருப்பதினால் இயேசுவும், கள்வனும் உடனடியாக பரதீஸிற்குள் (பரலோகத்திற்கு) எடுத்துக் கொள்ளப்பட்டனர் என்கிற முடிவிற்கு வந்து விடுகின்றனர்.

நாம் வசனத்தின் கருப்பொருள் மற்றும் பிற வேத வசனங்களோடு ஒப்பிடுகையில் அது சரியான காரணத்துடன் காணப்படும் விளக்கமாக எடுத்துக்கொள்ள முடியாது என்பதை புரிந்துக்கொள்ளலாம். இயேசு உடனடியாக பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாரா? வசனம் இயேசு மரித்ததை கூறியிருக்கின்றது. "இயேசு - பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார், இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்." (லூக்கா 23:46) இயேசு மரித்த பின்பு அர்மத்தியானாகிய யோசேப்பு பிலாத்துவிடம் இயேசுவின் சரீரத்தை கேட்டு அவருடைய சரீரத்தை சிலுவையிலிருந்து இறக்கி மெல்லிய துணியால் அதை சுற்றி கல்லறைக்கு எடுத்துச் சென்றார். (லூக்க 23 : 50 - 53)

எவ்வளவு நேரம் இயேசு மரித்த நிலையில் காணப்பட்டார் ? இயேசு மூன்று நாட்கள் மரண நிலையில் இருந்ததாக மத்தேயு 12: 40 ம் வசனம் குறிப்பிடுகிறது. இயேசுவும், கள்வனும் உடனடியாக பரலோகத்திற்கு செல்லவில்லை. கல்லறைக்கு எடுத்து செல்லப்பட்டனர். அப்படியென்றால் இயேசு எவ்வாறு கூறியிருக்க வேண்டும் - " இன்று நான் உனக்கு சொல்லுகிறேன்" ஆக்வே உயிர்த்தெழுதலின் போது அந்த கள்வன் கல்லறையிலிருந்து தேவனுடைய இராஜ்யத்தில் (பரதீஸ்) இயேசுவோடிருப்பான். (யோவான் 5:28,29)

## ஒரு முடிவிற்கு வருவதற்கு வசனத்தை எழுதினவரின் கருத்துக்களை பின்பற்ற வேண்டும்.

வசனத்தின் கருப்பொருள் வேதத்தைஎழுதினவரை பின்பற்றி அவருடைய முடிவிற்கு வருவதிலும் அடங்கியுள்ளது. நாம் அவருடைய கருத்துக்களின் முடிவை பின்பற்ற தவறுவோமானால் ஓர் தவறான முடிவிற்கு வர நேரிடும். இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக ரோமர் 11: 26ம் வசனத்தை எடுத்துக்கொள்ளலாம் -"இந்தப் பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார் என்றும்..." சிலர்

இவ்வசனம் இஸ்ரயேலருக்கு சொல்லப்பட்ட வாக்குத்தத்தம், இது சபைக்கு மாத்திரமே பொருந்தும் என்றும் அதை ஆபிரகாமின் சந்ததியான மாம்சீக இஸ்ரயேலருக்கு பொருந்தாது என்று கூறுகின்றனர்.


ரோமர் 11 ம் அதிகாரத்தில் பவுல் இரட்சிப்பை குறித்து தெளிவுபடுத்துகின்றவராய் இயேசு கிறிஸ்துவை பின் பற்றினவர்கள் மேசியாவை நிராகரித்த யூத ஜனங்களின் இரட்சிப்பை சாத்தியமாகிறது என்று கூறுகிறார் , அவர் கூறுகையில் - "இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ என்று கேட்கிறேன். தள்ளிவிடவில்லையே, நானும் ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரயேலன். தேவன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை." ரோமர் 11:1,2 மத்தேயு 21 :33-43 ல் குறிப்பிட்டிருப்பது போன்று தேவன் அவருடைய ஒரே பேரான குமாரனை நிராகரித்து அவரைக்கொன்ற யூத ஜனங்களை முழுமையாக தண்டிக்க வில்லை. பவுல் தொடாந்து தேவன் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்திற்குள் புறஜாதிகளை கொண்டுவருவது விசுவாசமில்லாத யூதர்களுக்கு ஆசீர்வாதங்களை கொண்டு வருவதற்கே என்று வாசிக்கிறோம் - "அவர்களுடைய தவறு உலகத்திற்கு ஐசுவரியமும், அவர்களுடைய குறைவு புறஜாதிகளுக்கு ஐசுவரியமுமாயிருக்க, அவர்களுடைய நிறைவு எவ்வளவு அதிகமாய் அப்படியிருக்கும். அவர்களைத் தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்குதலாயிருக்க, அவர்களை அங்கீகரித்துக்கொள்ளுதல் என்னமாயிராது, மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானதுபோலிருக்குமல்லவா?...." ரோமர் 11:12, 15 பவுல் மாம்சீக இஸ்ரயேலருக்கும் தேவனுடைய வாக்குத்தத்தத்திற்குள் ஆசீர்வாதங்கள் கிடைக்கப்பெறுவர் என்று கூறுகின்றார். "மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன், அதென்னவெனில், இந்தப்பிரகாரம் புறஜாதியாருடைய இஸ்ரயேலரெல்லாரும் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார் ..." ரோமர் 11:25,26

இந்த வசனங்களை புரிந்து கொண்டு அந்த வசனங்களின் கருத்தின் முடிவிற்கு வருகையில் பவுல் இஸ்ரயேலரின் இரட்சிப்பு நிறைவேறுவதை குறித்து கூறியிருக்கின்றார். "நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது." (ரோமர்11:27) "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்..." (எரேமியா 31:31), "இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி - கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை, அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.." - எரேமியா 31:34

பவுல் திரும்பவும் பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றிருக்கும் இஸ்ரயேலரின் விடுதலை குறித்ததான வாக்குத்தத்தங்களை விவரிக்கின்றார். பவுல் தொடர்ந்து மாம்சீக இஸ்ரயேலருக்குரிய ஆசீர்வாதம் சபையிலிருந்து நேரடியாக வரும் என்று கூறுகின்றார். "சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் உங்கள்நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள், தெரிந்துகொள்ளுதலைக்குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிரு -க்கிறார்கள். தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே. ஆதலால், நீங்கள் முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம்பெற்றிருக்கிறது போல,அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும், பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்...." (ரோமர் 11:28-31), ".. இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள், பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார்." (யாத்திராகமம் 19:5,6) இஸ்ரயேலர்கள் மேல் முற்பிதாக்கள் நிமித்தம் தம் இரக்கத்தை சபை வாயிலாக நீடிக்கச் செய்வார் என்று பவுல் தொடர்ந்து கூறுகின்றார்.

இறுதியாக வசனத்தையும் வசனத்தின் கருப்பொருளையும் புரிந்து கொள்ள அநேக வழி முறைகள் உள்ளதைக் கண்டோம். இத்தகு வழிமுறைகள் நாம் வேதத்தை தவறாக புரிந்து கொள்வதிலிருந்து நம்மை விடுவித்து அதை சரியாக புரிந்து கொள்ளும் படிக்கு செய்யும்.

# படிப்பவைகளை நடைமுறைப்படுத்துதல்



"அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்." - யாக்கோபு 1:22

Homer Montague

பரலோக பிதாவினுடைய அங்கீகாரத்தை பெற விரும்பும் கிறிஸ்தவர்கள், வேதாகமத்தில் உள்ள கற்பனைகளை தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி, ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வது, மிக முக்கியமானதென்று என்று இந்த வேத பகுதி கருதுகிறது. அநேக விசுவாசிகள் தங்களை ஊக்குவிப்பதற்காகவும், ஆவிக்குரிய ஐக்கியத்திற்காகவும், கிறிஸ்துவ அனுபவங்களை பகிர்ந்துகொள்வதற்காகவும், உபதேசங்களுக்காகவும் வேத பாட வகுப்புகளில் பங்கெடுத்தாலும், இவையனைத்தையும் ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தினால் மட்டுமே ஆவிக்குரிய வாழ்க்கையில் பயனுள்ளதாக இருக்கும். "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள், அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்." (பிலி 4:9)

## பலி

ஒருவர் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக இருந்தால், அவர் நிச்சயமாக பலி செலுத்த வேண்டும். இராஜரீகமான ஆசாரியத்துவம், ஆசீர்வதிப்பதற்கு முன் பலிசெலுத்த வேண்டும். பொதுவாக நம்முடைய சமுதாயத்தை பொருத்த வரையில் "பலி" என்ற வார்த்தை அந்நியமாக தோன்றலாம். இருப்பினும், நாம் கிறிஸ்துவின் சீஷர்களாக இருந்து, நம்மை நாமே வெறுத்தால், புது சிருஷ்டியை பனையமாக வைத்து, நம்முடைய உலக பிரகாரமான விருப்பங்களின் வளர்ச்சியை குறைத்து கொள்ளலாம். அநேக தேவ ஜனங்களுக்கு குடும்ப பொறுப்புகளையும், நியாயமான கடமைகளையும் பலிசெலுத்த முடியாமல் போகிறது. ஆகவே நம்முடைய தனிப்பட்ட நேரங்கள் மற்றும் தேவைகளை சரியான முறையில் பலி செலுத்தினாலே போதும், தேவன் நம்முடைய பலிகளை மகிழ்ச்சியோடு அங்கீகரிப்பார். ஏனெனில், நாம் அவர் மேல் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்த இதுவே வழியாக இருக்கிறது. "துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்." (ரோமர் 13:14)

நாம் நம்மையே பலி செலுத்துவதற்கு நம்மை சுற்றி அநேக தடைகள் சூழ்ந்திருக்கிறது. அவைகள் நம்முடைய பலத்தை குறைத்து, ஆவியை குன்ற செய்கிறது. இதில் நம்முடைய கண்களுக்கு குளிர்ச்சியானவைகளும், மாம்சத்திற்கு இன்பமானவைகளும் (பொதுவான மனிதர்கள் இவைகளை உரிமையோடு அனுபவித்து மகிழும் காரியங்கள்) அடங்கும். நாம் என்ன செய்யவேண்டும் என்றும் என்ன செய்யக்கூடாது என்றும் தீர்மாணிக்க, ஒரு எளிமையான வழிகாட்டியாக நமக்குள்ளே எழும் கேள்விகளை நாம் எடுத்துகொள்ளலாம். நாம் செய்யும் வேலைகள் நமக்குள் இருக்கும் புது சிருஷ்டியை வளர்க்குமா அல்லது நம்முடைய மாம்சத்தை மட்டும் திருப்திப்படுத்துமா என்று நாம் கேள்விகளை எழுப்பி, சிந்தித்து செயல்படவேண்டும். புது சிருஷ்டியின் வளர்ச்சிக்காக நாம் முயற்சிக்கும்பொழுது, நிச்சயமாக நாம் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட நன்மையான காரியங்களை நடப்பிக்கிறோம் என்று உறுதிகொள்ளலாம். ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் எதை பலி செலுத்த வேண்டும் என்று தீர்மாணிப்பதற்கு முழுமையான சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது, எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது. ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்." (1 கொரி10:23,31)

## ஒப்புக்கொடுத்தல்

தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க, அநேக வசனங்களில் உள்ள எடுத்துக்காட்டுகள் விசுவாசிகளை வழிகாட்டுகிறது - "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது, அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (பிலி 2:5- 8)

நம்முடைய தனிப்பட்ட சித்தங்களை தேவனுடைய சித்தமாக ஒப்புக்கொடுப்பது நடைமுறைக்கு அப்பார்ப்பட்டதாக இருக்கிறது. வசனங்களின் ஆதாரங்கள் இன்றி நம்முடைய தனிப்பட்ட நோக்கங்கள் இருந்தாலும், "எழுதப்பட்டிருக்கிறது" என்று எந்த விதமான மாற்றங்கள் இல்லாதபடி துவங்குகிறார். நம்முடைய சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில், நாம்

விரும்பாமலிருந்தாலும், பொறுமையுடன் நம்மை அர்ப்பணிப்பதே தேவனுடைய சித்ததை செய்வதின் ஒரு பகுதியாகும். "ஆகையால், ஏற்றக்காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1பேது 5:6)

உங்களுக்கு எப்போதாவது ஒரு இக்கட்டான அனுபவங்கள் ஏற்பட்டு "இதை நான் அனுபவிக்க அவசியமில்லை" என்று நினைத்ததுண்டா ? நாம் கிறிஸ்துவின் சிந்தையை தரித்திருக்கவேண்டியவர்களாயிருக்க, கிறிஸ்து எதிர்நோக்கின ஒவ்வொரு கசப்பான அனுபவங்களையும் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். தேவனுடைய சித்தத்தை செய்வதில் நமக்கு தொய்வு ஏற்பட்டால் நாம் பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நாம் எதிர்த்து நிற்கவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். (எபி 12:1-14)

## பிறரை விமர்சிப்பதை தவிர்க்க வேண்டும்

"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்." (யோவா 3:17) நம்மால் முடிந்த வரையில் கிறிஸ்துவின் ஆவியை பெற்றுகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய ஆண்டவர் அனைவரின் சிந்தைகளை அறிந்தவராக இருந்தாலும், அவரை பரியாசம் செய்து, அவர் மேல் குற்றம் சுமத்தின பரிசேயர்கள், சதுசேயர்கள் உட்பட அனைவருக்காகவும், மரித்தவர் அவரே. நம்முடைய கிரியைகளும், நோக்கங்களும், நம்முடைய நீதிகளை மற்றவரிடத்தில் வெளிப்படுத்தக்கூடாது. நாம் மாம்சத்திலிருக்கும் நாள்வரை இதை நிலைநிறுத்த தொடர்ந்து போராடவேண்டும். ஜெபத்தின் வழியாகவும், மனம் வருந்துதலினாலும், இதற்கு ஏற்படும் தடைகளை அகற்ற முயற்சிக்கவேண்டும்.

இதைக் குறித்து நம்முடைய ஆண்டவர் கூறும் பொழுது - "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன ? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி - உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போடவகைபார்ப்பாய். " (மத் 7:3-5) என்று நமக்கு அறிவுரை கூறுகிறார். எந்த தனிப்பட்ட நபரின் இருதயத்தின் நோக்கங்களை நியாயந்தீர்க்க நமக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. கூடுதலாக, நாம் கிறிஸ்துவின் ஆவியில் அளவில்லாமல் நிரப்பப்பட்டவர்களாக, எல்லா தீய காரியங்களும் மாம்சத்தின் கிரியைகள் என்று அடையாளம் கண்டுகொள்ளவேண்டும். ஏனெனில், "அன்பு தீங்கு நினையாது" (1கொரி 13:5) என்று நாம் வாசிக்கிறோம். மற்ற சகோதரர்கள் தங்களுடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கைக்கு முரண்பாடாக செய்யும் தவறுகளை நாம் சந்தேகிக்கக்கூடாது. அதற்கு பதிலாக அவர்களுடைய அறியாமையினாலே இவைகள் நடந்து விட்டது என்று நாம் கருதிவிட்டு, அவர்களை நியாயந்தீர்க்காமல், விசாரித்து, அறிவுரைகளை கூறுவது மிகவும் ஏற்றதாக இருக்கும். ஏனெனில், பொதுவாக அனைவரும் இப்படிப்பட்ட தவறுகளுக்கு குற்றம் சுமத்தப்படுகிறோம். ஆனால் இப்படிப்பட்ட பாடங்களின் மூலம் தேவனுடைய பிள்ளைகள் வார்த்தைகளினால் ஏற்படும் தவறுகளை தடுக்க எடுக்கும் பிரதிக்கினைகளை அதிகமாக உறுதிப்படுத்திகொள்வார்கள்.

## பரிவு

சத்தியத்தின் ஆவியை தங்களுடைய வாழ்க்கையில் நடைமுறைபடுத்தும் விசுவாசிகளை அடையாளப்படுத்தும் ஒரு முக்கியமான குணலட்சனம் - பரிவு. "அன்பு, அக்கறை மற்றும் மற்றவர்களுக்கு உதவிசெய்யும் மனப்பான்மையின் கலவையே பரிவு. சில நேரங்களில் இரக்கம் என்ற வார்த்தையும் இதற்கு பதிலாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பரிவு என்ற வார்த்தைக்கு இதை விட அதிகமான அர்த்தங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. துன்பப்படும் ஜனங்களுக்கு மனப்பூர்வமாக முன்வந்து உதவிசெய்யும் மனப்பான்மையையும் உடையதாக இருக்கிறது." என்று Illustrated வேதத்தில்பரிவு என்ற வார்த்தைக்கான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

வேதவசனங்களில், தேவன் மனுக்குலத்தின் மேல் வெளிப்படுத்தும் நன்மைகளை பலவழிகளில் விவரிக்க "பரிவு" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "ஆனாலும் ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்." (சங் 86:15) தேவன் சபையின் மேல் வெளிப்படுத்தும் அன்பையும், இரக்கத்தையும் குறித்தும் வசனங்கள் தெளிவாக குறிப்பிடுகிறது -"கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக. "(எபேசியர் 2:6,7)

மனுக்குலத்தில் விழுந்து போன நிலைமையை கண்ட இயேசு அவர்களுக்காக பரிதபித்து, தன்னுடைய ஊழியத்தின் போது அதிகமான பரிவையும், இரக்கத்தையும் வெளிப்படுத்தினார். (எபிரெயர் 4:15) அவர் விழுந்துகொண்டிருக்கும் அபூரணமான மனுக்குலத்தின் துக்கங்களை கண்டார். அதே போல் நாமும் இரக்கமுள்ள ஆசாரிய வகுப்பிற்கு தகுதியடையும் பயிற்சியை பெறுவதற்கு, இந்த வேதனைப்படும் மனுக்குலத்திற்காக பரிதபிக்கவேண்டும். தேவனுடைய இராஜ்யம்

பகிரங்கமாக ஸ்தாபிக்கப்படும் வரைக்கும், இன்றைய காலத்தில் நித்தியமான நன்மைகளை நம்மால் செய்ய இயலாமல் போனாலும் - "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்." (கலா 6:10)

இதற்கு தொடர்பாக யோசேப்பு எகிப்தில் பெற்ற அனுபவங்களை சற்று புரட்டிப்பார்ப்போம். தன்னுடைய சகோதரர்கள் பகைத்து, அவரை விற்றுப்போட்டார்கள். ஆனால் அதற்கு பின்பு அவர் எகிப்தின் இரண்டாவது அதிபதியானார். யோசேப்பு தன்னுடைய சகோதரனாகிய பென்னியமீனை தன்னோடு, ஒரு வேலைக்காரனாக வைத்துகொள்வேன், என்று அவர்களை சோதித்தபோது, அவர்களின் இருதயத்தின் மாற்றங்களை கண்டு, தன்னுடைய சகோதரர்களுக்கு தன்னை வெளிப்படுத்தியபோது, யோசேப்பு சத்திமிட்டு அழுது, அனைவரையும் கட்டி தழுவினார். இதை தொடர்ந்து யோசேப்பு தன்னுடைய தந்தை யாக்கோபோடு சேர்ந்து வாழ்ந்தார். அவரோடு கூட அவருடைய சகோதரர்களும் அவர்களின் குடும்பங்களும் எகிப்தில் சுகித்து வாழ்ந்தார்கள். யாக்கோபின் மரணத்திற்கு பின்பு யோசேப்பின் சகோதரர்கள் அவர் பழிவாங்கிவிடுவாரோ என்று அஞ்சினார்கள். அப்பொழுது யோசேப்பு - ".... பயப்படாதிருங்கள், நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்." (ஆதியாகமம் 50:21)

விசுவாச வீட்டாரின் அங்கமாக இருக்கும் விசுவாசமுள்ளவரின் அற்புதமான ஆவி எவ்வளவு நேர்த்தியாக செயலாற்றப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்கு புது சிருஷ்டிகளாக இருக்கும் நாம், இந்த விசுவாச வீட்டாரின் கிரியைகளை காட்டிலும், சற்று குறைவாக கிரியைகளை வெளிப்படுத்துவதை இந்த உலகமும், தேவனுடைய நீதியும் ஏற்றுக்கொள்ளுமா ?

எந்த சூழ்நிலையிலும், நம்முடைய அசௌகரியத்தின் மத்தியிலும், மற்றவர்கள் மேல் அன்பு செலுத்தி, அவர்களுக்கு உதவி செய்யும் மனப்பக்குவத்தை இந்நாள் வரைக்கும் நமக்குள் அதிகரித்திருக்கிறோமா ? கிறிஸ்துவின் ஆவி நமக்குள் இருக்கும் பட்சத்தில், பரிவு என்ற குணம் நிச்சயமாக நமக்குள் இருக்கவேண்டும். மேலும், நாம் படித்த வேதபாடங்களை நாம் நடைமுறைபடுத்தவேண்டும்.

## ஜெபம்

பரலோக பிதாவை அணுகுவதற்காக புது சிருஷ்டிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மாபெரும் சிறப்புரிமையே - ஜெபம். நமக்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், தேவனுடைய கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் கிருபாசனத்தண்டையில் சேருவோமானால் நமக்குள் இருக்கும் கிறிஸ்துவ வாழ்க்கையில் வளர்ச்சி நிச்சயமாக அதிகரிக்கும். ஆகவே நம்முடைய அன்பான சிருஷ்டிகரிடம் தேவையான விண்ணபங்களை விண்ணப்பிப்பதற்கு நாம் வசனங்களில் உள்ள போதனைகளை தேடுவதற்கு ஊக்குவிக்கப்படுகிறோம்.

"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்." (லூக்கா 11:13) அவருடைய ஆசீர்வாதங்களுக்காக நாம் தேவனிடம் விண்ணப்பித்த பின்பு வேதபடிப்பின் மூலம் வெகு ஜாக்கிரதையாக நம்முடைய சிந்தையையும், கிரியைகளையும், வார்த்தைகளையும் ஆராய்ந்து, நம்முடைய இருதயத்தில் பரிசுத்தத்தை அதிகரித்து, அவருக்கு பிரியமானவைகளை நாம் நடப்பிக்கவேண்டும்.

இயேசு இந்த உலகத்தில் ஒரு ஜெப வாழ்க்கையை வாழ்ந்து, நமக்கும் ஓர் மாதிரியை விட்டுச்சென்றிருக்கிறார் -"நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்."(யோவான் 17:15) நம்முடைய சோதனை நாட்களிலிருந்து நம்மை விடுவித்து, அபாயத்திலிருந்து நம்மை தப்புவிக்க விரும்புகிறார். நாமோ இப்படிப்பட்ட சோதனைகளிலும், பொல்லாத வழிகளில் நம்மை காத்துக்கொண்டு, அசுத்தங்களுக்கு விலகி, ஆண்டவருடைய அருகாமையில் வாழ்ந்து, அவருடைய வார்த்தைகளை பின்பற்றி நடக்கவேண்டும்.

ஞானத்திற்காக நாம் தேவனிடத்தில் ஜெபிக்கவேண்டும் என்று யாக்கோபு எச்சரிக்கிறார். (யாக்கோபு 1:5)நம்முடைய விண்ணபங்களை பொறுத்த வரையில் அவைகளுக்கு பதில் அளிக்கப்படவேண்டுமானால், நாம் அதற்காக கிரியைசெய்யவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நாம் ஞானத்தை பெற விரும்பினால், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் மூலம் நாம் வேதத்தை படிக்கவும், அதை தியானிக்கவும், சகோதரர்களோடு அவைகளை குறித்து சம்பாஷிக்கும் பொழுது தேவன் நம்முடைய ஜெபங்களுக்கு எல்லா கோணங்களிலிருந்தும் பதில் அளிப்பார்.

இந்த சுவிசேஷத்தை பரப்புவதற்கான முயற்சிகள் எடுக்கும் சகோதரர்களுக்காகவும், அவர்கள் இந்த தேவனுடைய பிரதிநிதிகளாக தங்களுடைய ஊழியத்தில் முன்னேறவும் நாம் ஜெபிக்கவேண்டும். சுயவிருப்பங்களுக்காக

ஏறெடுக்கப்படும் ஜெபங்களை தேவன் ஏற்றுக்கொள்வதில்லை, ஏனெனில் நாம் அனைவரும் ஒரே சரீரத்தின் அங்கங்களாக இருக்கிறோம்.

நம்முடைய சத்துருக்களுக்காகவும் நாம் ஜெபிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். (மத்தேயு 5:44) நாம் எந்த விதமான கசப்பும், கபடமும், வஞ்சகங்களும் இல்லாதவர்களாக, மனப்பூர்வமாக நம்முடைய சத்துருக்களுக்கு ஜெபித்தோமானால், அன்பின் உச்சக்கட்டத்தை அடைந்திடுவோம். இப்படிப்பட்ட அன்பை இயேசு இந்த மனுக்குலத்தின் மேல் வெளிப்படுத்தினார். உயிர்த்தெழுதலின் போது அவருடைய துரோகிகளும் திரும்பவருவார்கள். அவரை குத்தினவர்களும் அவரை காண்பதினால் துக்கித்து அவமானத்தால் புலம்புவார்கள்.

## நீடிய பொறுமை

" உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது." (யாக்கோபு 1:3,4) நம்முடைய விழுந்துபோன நிலைமையினால், அநேக சூழ்நிலைகளில் நாம் பொறுமையை இழந்துவிடுகிறோம். நாம் எதிர்பார்க்கும் விதத்தில் மற்றவர்கள் செயல்படாதபோது நாம் எரிச்சலடைகிறோம். ஒருவேளை சில வியாபாரிகளோடு வியாபாரம் செய்ய நேரிடும்பொழுது, அந்த வியாபாரிகள் நம்மை ஏமாற்றியோ அல்லது கால தாமதமாக சில காரியங்களை செய்வதினாலோ நமக்கு பல சோதனைகள் நேரிடும். இவையணைத்தும் நம்முடைய நீடிய பொறுமையை சோதிப்பதற்காக அனுமதிக்கப்படுகிற சோதனைகளா ?


சிலருடைய சிந்தையில், பூமியில் உள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய நீதியுள்ள இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு சற்று தாமதமாகிறது. இது நம்முடைய விசுவாசத்தின் பரிட்சையாக இருக்கக்கூடுமா ? விசேஷமாக, நாம் எதிர்பார்த்து சில காரியங்கள் நடைபெறாமல் போனதினால், நாம் ஆண்டவருடைய இரண்டாம் வந்திருத்திலில் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம், என்பதற்கான முக்கியமான ஆதாரங்களை ஒதுக்கிவிட கூடுமோ? அல்லது ஒரு இமைபொழுதில் பரிசுத்தவான்கள் மறுரூபமாக்கப்பட்டு, ஏற்கனவே எந்த பரிசுத்தவான்களோடு இணைந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மறுக்கக்கூடுமோ?

பரலோக பிதாவை பொறுத்தவரையில், சாத்தானுடைய துன்மார்க்கத்தின் நிமித்தம் அவர் பொறுமை இழந்தவராக இருக்கவேண்டும். மேலும், இன்றைய கொடூரமான சூழ்நிலைகளை பார்க்கும்பொழுது, நம்முடைய ஆண்டவராம் இயேசுவுக்கு சபை பூரணமடைவதற்கு காலங்கள் குறைவாக இருப்பதினால் அவர் இது வரைக்கும் பூரணப்பட்ட மணவாட்டியோடு சபையை முடித்துக்கொள்வாரா ?

நம்முடைய கிறிஸ்துவ பயணத்தில் நாம் தொடர்ச்சியான தவறுகளை செய்யும் பொழுது நம்முடைய சிருஷ்டிகர் என்ன செய்யவேண்டும் ? நிச்சயமாக, அநேக சந்தர்பங்களில், தேவன் நம்மேல் நீடிய பொறுமையாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறது போல நாமும் பல நேரங்களில் இந்த நீடிய பொறுமையை தக்கவைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இப்பொழுது நாம் நம்மையே சற்று ஆராய்ந்து பார்போம், நம்முடைய அழைப்புக்கு ஏற்றவாறு கடுமையாக உழைத்து, அதே சமயத்தில் நாம் இயலாத போது செய்யும் தவறுகளுக்கு மன்னிப்பு பெறாமல் இருந்தால், நம்மால் கிறிஸ்துவ வாழ்க்கையில் முன்னேற முடியுமா ? ஆகவே நாம் தொடர்ச்சியாக நம்முடைய மீறுதல்களுக்காகவும், ஏற்ற சமயத்தில் உதவிகளுக்காகவும் தேவனை நோக்கி அவருடைய இரக்கங்களுக்காகவும், கிருபைக்காகவும் கெஞ்சுவோம். அதேபோல தேவன் நம்மீது காட்டவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கும் நீடிய பொறுமையையும், கிருபையையும் நாம் மற்றவர்களுக்கும், நம்முடைய சகோதரர்களுக்கும் நம்மால் முடிந்த வரைக்கும் காட்டவேண்டும். இதை தவிர நம்முடைய கிறிஸ்துவ வளர்ச்சியை வேறு எந்த குணலட்சனங்களும் அதிகரிக்கமுடியாது.

சகோதர சகோதிரிகளே, வேதாகம படிப்பானது நம்முடைய அறிவை அதிகரிப்பதற்கு மட்டும் அல்லாமல் நமக்குள் இருக்கும் தனிமனித பழக்கத்தில் அவைகளை நடைமுறைபடுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம். வேத படிப்புகள் நம்முடைய மூளையை மட்டும் அல்ல குணங்களையும், செயல்முறைகளையும், நடக்கையையும், மாற்றவேண்டும், தேவனுடைய வார்த்தைகள் கண்ணாடியைபோல் இருக்கிறது. அதனுடைய வெளிச்சத்தின் கட்டளைகளில் நம்முடைய நடத்தையை ஒப்பிடும்பொழுது, நாம் சீர்பொருந்தப்பட்டு, ஆவிக்குரிய வளர்ச்சியில் ஒரு உயர்வான நிலையை அடைந்திடுவோம். "ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்." (மத்தேயு 7:24) ஆகவே நாம் அனைவரும் ஆண்டவருடைய வார்த்தைகளை கேட்டு, அவருடைய மாதிரியை உணர்ந்து, அதன்படி நடந்து, அவருடைய உபதேசத்திற்கு ஏற்றவாறு ஜீவிப்போம்.

# வரலாறும் அறிவியலும்



"வேத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது." 11பேதுரு 1:20,21

Richard E.Evans

உண்மைகள் பல காரணங்கள் வழியாக நிரூபிக்கப்பட்டாலும், இறுதியில் அவை அனைத்தும் விசுவாசத்தை பொருத்த காரியமாகவே இருக்கிறது. வேதத்தை வாசித்து அவைகளினால் பயன்பெற முதலில் இரண்டு அடிப்படையான உண்மைகளை நாம் வெளியரங்கமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

* தேவன் ஒருவர் இருக்கிறார். இவரே சகலத்தையும் படைத்தவர்.

*வேதம் தேவனுடைய வார்த்தை - அது புத்திமதிகள் அடங்கிய புத்தகம் அல்லது சிருஷ்டிகர், தம்முடைய விருப்பத்தை தெரிவித்து, அவைகளின்படி நடக்க தன்னுடைய சிருஷ்டிகளுக்கு கொடுத்த ஒரு சிறிய கைபிரதியாகும்.

வேதம் தேவனுடைய வார்த்தை (11தீமோ 3:16) என்று ஏற்றுக்கொள்வது விசுவாசிக்க வேண்டிய ஒரு காரியமாக இருக்கிறது. எப்படியிருந்தாலும் வருங்கால சம்பவங்களை குறித்த தீர்க்கதரிசனங்கள், அதன் பழங்கால வரலாறு, அதன் அரசியல் விபரங்கள், வெளிப்படையான உலகம் - இவையனைத்தும் வரலாறு மற்றும் விஞ்ஞான உண்மைகள் உறுதிப்படுத்தியதை தொடர்ச்சியாக உறுதிப்படுத்துகிறது. மனுக்குலத்தின் அறிவு விஞ்ஞானப்பூர்வமாக பெருகி சில முன்னேற்றமான உண்மைகள் வெளிப்படும் போது, வேதத்தில்உள்ள பிழையற்ற உண்மைகள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் உறுதியாக நிரூபிக்கப்படும்.

## பேதுருவின் தெய்வீக கட்டளை

தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பேதுருவின் பிரமாணம், வேதத்தை படிப்பிற்கு, தேவையான ஒரு முக்கிய கோட்பாட்டை வெளிப்படுத்துகிறது. வேதம் முழுவதும் (பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு) தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. ஒவ்வொரு பகுதியும் முழு வெளிச்சத்தில் புரிந்துக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. கடினமான பகுதிகளை புரிந்துக்கொள்வதற்கு, அதற்கு இணையான பகுதிகளை நாம் ஆராயவேண்டும். கொடுக்கப்பட்ட பாடத்தில் அனைத்து பகுதிகளையும் படித்தபின் கடினமான பகுதிகளை எளிதில் புரிந்துக்கொள்ளலாம். இவைகள் சரியாக புரிந்துக்கொள்ளப்பட்டிருந்தால், ஒவ்வொன்றும் இசைவாக இருக்கும். மேலும் வரலாறு மற்றும் விஞ்ஞானத்தின் உண்மைகளோடும ஒத்துப்போகிறது.

இன்றும் அநேகர் - வேதாகமம் உண்மையானது என்று நம்புகிறார்கள். வரலாறு மற்றும் விஞ்ஞானத்தையும் நம்புகிறார்கள். துரதிஷ்டவசமாக, இவைகள் இரண்டிற்கும் முரண்பாடுகள் ஏற்படும்போது குறிப்பிட்ட சிலர் வேதாகமத்தை காட்டிலும் விஞ்ஞானம் மற்றும் வரலாற்றை சார்ந்திருப்பதே சரி என்ற முடிவிற்கு வந்துவிடுகிறார்கள். இப்படி இருக்கலாகாது. வரலாறு மற்றும் விஞ்ஞான கருத்துக்கள் - வேதாகம விளக்கங்களோடு ஒப்பிடும் போது மனித தவறுகள் நடப்பது இயல்பு. இவைகள் பல முறை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

மோசே சொல்லிய ஒரு வாக்கியம், ஒரு தீர்க்கத்தரிசியின் சிந்தை, இயேசுவிடமிருந்து ஒரு பாடம் மற்றும் அப்போஸ்தலர்களின் எச்சரிப்பு, இவையனைத்தும் சரியாக "பகுத்துப் பிரிக்கப்பட்டு ஆராயப்பட்டால்" அந்த தலைப்பில் இருக்கக்கூடிய தேவனுடைய திட்டத்தை மிக தெளிவாக வெளிப்படுத்தும். தனித்து எடுக்கப்பட்ட வசனங்கள் முழுமையான அர்த்தங்களை கொடுக்க வாய்ப்பில்லை. பேதுரு சொன்னது போல எந்த வசனமும் சுயதோற்றமான பொருளை கொடுப்பதில்லை. ஒரு வசனத்திற்கு உண்டான ஆதார வசனத்தை நாம் நிராகரித்து விட்டால், நம்மை மிக பெரிய தவறுக்கு வழிநடத்திவிடும். இப்படியாக, தனிப்பட்ட விளக்கங்கள், தெய்வீக நோக்கத்திற்கு எதிராக அநேக தவறான சிந்தனைகளை விளைவித்திருக்கிறது. (தேவனுடைய கோபம், நித்திய ஆக்கினை, அழியா ஆத்துமா, 24 மணி நேரம் கொண்ட சிருஷ்டிப்பின் நாட்கள்) கொடுக்கப்பட்ட பாடத்தில் உள்ள உண்மைகளை அறிந்துக்கொள்ள, வரலாறு மற்றும் விஞ்ஞானம் அனைத்தும் வேதாகமம் வெளிப்படுத்துவதை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் ஏதோ ஒரு பகுதியை மட்டும் வலுக்கட்டாயமாக சேர்க்கவோ, தள்ளவோ நேரிட்டால்,

எதிர்பார்க்கப்பட்ட சரியான முடிவுகள் எடுப்பதற்கு பிரச்சனைகள் ஏற்படும்.

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிதையாயிரு." (11தீமோ 2:15)

## ஆதியிலே

"ஆதியிலே தேவன் வானத்தையும் (வானங்களையும்) பூமியையும் சிருஷ்டித்தார்." (ஆதி 1:1)

இந்த ஒரு துவக்கத்தில், காலங்கள் மற்றும் நேரங்களின் அளவுகளையும், வரலாறு உண்மைகளையும் வெளிப்படுத்தி, வேதாகமம் சத்தியமானது என்று நிரூபிக்கிறது. அதை தொடர்ந்து வந்த அண்டசராசரத்தின் வரலாறு நிலையாக இருக்கவில்லை. அங்கு ஒரு துவக்கம் இருந்தது. ஆதியிலே, வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தவரின் முன்திட்டப்படி, அந்த துவக்கம் வருங்காலத்தை நோக்கி தொடர்ந்தது.

"அந்தச் சிருஷ்டியானது சுயஇஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது." (ரோம 8:21,22)

மனுக்குலம் படைக்கப்பட்ட பின் அவன் வீழ்ச்சியடைந்ததை (ஜீவனை இழந்து, நித்தியமாக வாழக்கூடிய உரிமை இழக்கப்பட்டது) வரலாறு மற்றும் விஞ்ஞானத்தின் ஆதாரங்கள் இன்றி வேதத்தில் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வேதத்தில்மட்டுமே பதிவு செய்யப்பட்டிருக்கும் உண்மைகளுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. வேதத்தைபொறுத்தவரையில் "வீழ்ச்சி" என்பது நடந்த "உண்மைகள்". அதை பற்றிய காரியங்கள் முழுமையாக வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மேலும் தேவனுடைய முன்திட்டமிட்டபடி இவைகளுக்குண்டான தீர்வும் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றொரு பக்கத்தில், விஞ்ஞானிகளோ, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களோ, இன்றைக்கு நடைபெறும் தீமைகள், மரணம் மற்றும் இவைகளின் முடிவு என்ன என்பதை குறித்து இந்நாள் வரைக்கும் எவ்விதமான விளக்கங்களையும், அதன் தீர்வுகளையும் பற்றி எதுவும் சொல்லவில்லை.

பிள்ளைகள், விசேஷமாக ஒடுக்கப்பட்டுள்ள சிறுபான்மையானவர்களுக்கு, தங்களுடைய இன்றைய உண்மையான நிலையையும், சமுதாயத்தில் அவர்களின் அந்தஸ்து என்னவென்பதையும் அவர்களுக்கு அறிவிக்கவேண்டும். மனுக்குலம் தன்னுடைய வரலாறையும், இன்றைய நிலையையும் அதன் உண்மைகளையும் அவசியமாக அறிந்துகொள்ளவேண்டும். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மனுக்குலத்தின் சிருஷ்டியின் ஆதிகால வரலாற்றையும் கூட வெளிப்படுத்துகிறார்கள் - எழுத்துக்கள், இன்னும் பலவற்றை எடுத்துக்காட்டுகிறது. இவையனைத்தும் மனுக்குலத்தின் தனித்துவத்தை காட்டுகிறது. இருப்பினும், மனுக்குலம் கடந்த யுகங்களில் மதிப்பு குறைவுள்ள காரியங்களை நடப்பித்து வருகிறது வெளிப்படையாக தெரிகிறது. மனுக்குலத்தின் உண்மையான வரலாறு மட்டுமே விழுந்துபோன மனுக்குலத்தின் இன்றைய காலத்தின் நிலையை துல்லியமாக விவரிக்கிறது. வரலாறோ, தொல்பொருள் ஆராய்ச்சியாளரோ அல்லது விஞ்ஞானமோ தெளிவாக விவரிக்க முடியாமல் வேதாகமம் சொல்லுவதற்கு பக்கபலமாக மட்டுமே விளங்குகிறது.

## வேதத்தைஆதரிக்கும்,நிரூபிக்கப்பட்ட உண்மைகள்

அநேக நூற்றாண்டுகளாக வேதாகமத்தின் மேல் உள்ள நம்பிக்கையை குலைக்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், அது ஒரு சவாலாக இருந்து வருகிறது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் எவ்வளவு அதிகமான உண்மைகளை தோண்டி எடுக்கிறார்களோ அவ்வளவு காரியங்களும், வரலாற்றுப்பூர்வமான ஆதாரங்களும், வேதாகமம் உண்மை என்று நிரூபிக்கிறது. விஞ்ஞானிகள் அண்டசராசரத்தை குறித்த எவ்வளவுக்கு எவ்வளவு அறிவை பெறுகிறார்களோ, அவ்வளவு அறிவும், வேதாகமம் அண்டசராசரத்தை குறித்துச் சொன்ன காரியங்கள் அனைத்தும் உண்மை என்று நிரூபிக்கிறது.

விஞ்ஞானம் மற்றும் வரலாறுக்கும், வேதாகமத்தோடு இசைவாக இருக்கும் காரியங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் உள்ளது. (DNA) 1987ல் Nature என்ற புத்தகத்தில் ஸ்திரிகள் அனைவரும் ஒரே பெண் மூதாதையின் மூலம் வந்தவர்கள் என்று பிரசுரிக்கப்பட்டது. அடுத்த 1995 ல் எல்லா ஆண்களும், ஒரே ஆண் மூதாதையின் மூலம் வந்தவர்கள் என்று பிரசுரிக்கப்பட்டது. தனித்தனியாக ஆராய்ச்சிகள் நடந்திருந்தாலும், ஆணைக் காட்டிலும் ஸ்திரீ முன்னதாகவே தோன்றியிருக்கவேண்டும் என்ற கருத்தை குறிப்பிட்டது. இந்த ஒரு கருத்து வேதத்தோடு மிக அற்புதமாக ஒத்துப்போகிறது.

ஏனெனில், நோவா மற்றும் அவருடைய குமாரர்களும், அவர்களின் மனைவிகளின் மூலமாக ஜனங்கள் பெருகினாலும், அவர்கள் அனைவருக்கும் நோவா என்னும் பொதுவான ஒரே மூதாதையர் இருந்தார். ஆனால் மூதாதையராகிய அந்த ஸ்திரீ சுமார் ஆறாயிரம் வருடங்களுக்கு முன் இருந்திருக்க வேண்டும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. (The Herald of Christ's Kingdom, July/ Aug 1998) ஆகவே ஜலப்பிரளயத்திற்கு பின் வந்த நோவாவையும், சுமார் ஆறாயிரம் வருடங்களுக்குமுன் வாழ்ந்த ஏவாளையும் குறித்து விஞ்ஞானிகள் இங்கு தெளிவாக சொல்லுகிறார்கள்.

முற்காலத்தில் நடந்தவைகளை, இக்காலத்தில் விஞ்ஞான கண்டுபிடிப்புகள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சிகளும், உண்மை என்று நிரூபிப்பதற்காக தொகுத்து கொடுக்கப்பட்டுள்ள துல்லியமான அறிவு, வேதத்தில் மட்டுமே காணப்படுகிறது. சுமார் 3000 வருடங்களுக்கு முன், பூமி அந்தரத்தில் தொங்குகிறது என்று யோபு கற்பித்தார். (யோபு 26:7)

பூமி தட்டையாக இருக்கிறது என்று ரோமர்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாக நம்பிவந்தனர். ஆனால் தீர்க்கதரிசியான ஏசாயா, பூமி உருண்டை என்பதை முன் அறிவித்தார். (ஏசாயா 40:22)

நவீன தொழில் நுட்பத்தினால் சமுத்திரத்தின் வரைப்படத்தை போட்டு, அதில் உள்ளவைகளை பற்றி அறிவிக்குமுன், யோனா கடலின் ஆழத்தை பற்றியும், அவைகளில் உள்ளவைகளை பற்றியும் தெளிவாக விவரித்தார். (யோனா 2:5,6, யோபு 38:16)

சில நூற்றாண்டுகளுக்குமுன் கலிலியோ தண்ணீரின் சுழற்சி செயலைப் பற்றி விவரித்தார். சூரிய கதிர்கள் கடலிலிருக்கும் தண்ணீரை நீராவியாக மாற்றி, வான மண்டலத்தில் மேகங்களாக விட்டுவிடுகிறது, காற்று அவைகளை அடித்துச் சென்று, அந்த மேகங்களை மழையாக பொழியச் செய்கிறது. பெய்யும் மழை நிலங்களை நனைத்து, ஆறுகளாக ஓடி மீண்டும் கடலை சென்றடைகிறது. இந்த ஒரு தண்ணீர் சுழற்சி இல்லாமல் பூமியில் உள்ள சிருஷ்டிகளுக்கு சுத்தமான தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லை. கலிலியோ அறிவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே தீர்க்கதரிசிகள் இதை பற்றி அறிவித்தார்கள்.

"அவர் (தேவன்) தண்ணீர்களைத் தம்முடைய கார்மேகங்களில் கட்டிவைக்கிறார், அதின் பாரத்தினால் மேகம் கிழிகிறதில்லை." (யோபு 26:8)

"அவர் (தேவன்) நீர்த்துளிகளை அணுவைப்போல ஏறப்பண்ணுகிறார், அவைகள் மேகத்திலிருந்து மழையாய்ச் சொரிகிறது." (யோபு 36:27)

"அவர் (சத்தமிடுகையில் திரளான தண்ணீர் வானத்தில் உண்டாகிறது, அவர் பூமியின் எல்லைகளிலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டசாலையிலிருந்து ஏவிவிடுகிறார்." (எரேமி 51:16)

"அவர் வானத்தில் தமது மேலறைகளைக் கட்டி, பூமியில் தமது கீழறைகளை அஸ்திபாரப்படுத்தி, சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளைப் பூமியினுடைய விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர். கர்த்தர் என்பது அவருடைய நாமம்." (ஆமோஸ 9:6)

சமுத்திரத்திலிருக்கும் நீரோட்டத்தை பற்றிய விபரத்தை எழுதின முதல் புத்தகம் 1800ல் அச்சடிக்கப்பட்டது. இருப்பினும் எந்த விதமான சமுத்திரத்தையும் கண்டிராத தாவீது அதன் வழிகளை பற்றி எழுதியுள்ளார். "ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்." (சங் 8:8)

இன்றைய நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகளும், வரலாறுகளும், கண்டுபிடித்த உண்மைகளை சட்டத்தின்படி நிரூபிக்கப்பட்டு ஒவ்வொன்றும் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஞ்ஞானம் மற்றும் வரலாறு பூர்வமான காரியங்களை துல்லியமான சத்தியம் என்று உறுதியளித்துக்கொண்டே இருக்கிறது. இனி வரும் கண்டுபிடிப்புகளும், வேதத்தில் உள்ளவைகளை ஒரு போதும் எதிர்க்கமுடியாது. கூடுமானால் அதை உறுதிப்படுத்தும் ஆதாரமாகத் தான் இருக்கவேண்டும். ஏனெனில் அனைத்திற்கு ஒரே தோற்றம் உள்ளது. ஆனாலும் நாம் மிக எச்சரிப்புடன் இருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். வேதத்திற்கு ஒத்துப்போகாத எந்த வித்மான விஞ்ஞானத்தோடும், வரலாறோடும் நாம் இசைந்திடக்கூடாது. ஏனெனில், அவைகளும் கூடியசீக்கிரத்தில் பயனற்று போய்விடும்.

வேதத்தில் குறைகாணும் சிலர் சொல்லுவது போல, வேதத்தில் உள்ள பல புத்தகங்கள் பழங்காலத்து சம்பவங்களை மட்டும் குறிப்பிடுகிறதில்லை. மாறாக, இந்த உலகத்தின் வருங்காலம் எப்படிப்பட்ட ஆதாரத்தின் அடிப்படையில் இயங்கும் என்ற வரலாற்றை மிக தெளிவாக வெளிப்படுத்துகிறது. வேதத்திலுள்ள முதல் புத்தகம் இதைப் பற்றி ஒரு மேலோட்டமான காரியத்தை துவங்கி முடிவு மட்டும் எடுத்துச்செல்கிறது. பொதுவாக - மீட்பு, கிருபை, விசுவாசம், இரட்சிப்பு,

அன்பு, நித்திய ஜீவன், இன்னும் பல காரியங்களை பற்றிய தொகுப்பை இது கொண்டுள்ளது. இந்த "நற்செய்தி" முழு வேதாகமத்திலும் காணப்படுகிறது. விஞ்ஞானம் மற்றும் வரலாறு (தொல்பொருள் ஆராய்ச்சி) இப்படிப்பட்ட நற்செய்திகளை என்றுமே வெளிப்படுத்தமுடியாது. வேதம் உண்மையானதாக இராவிட்டால், மனுக்குலத்திற்கு எந்த விதமான நம்பிக்கையும் இருக்கவாய்ப்பில்லை.

வேதத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தைகளை வெறுக்கக்கூடியவர்கள், தங்களுடைய ஜீவனை தங்களுக்கு பின் எறிந்துவிடுகிறார்கள், என்ற முக்கியமான சத்தியத்தை வேதம் உறுதியாக அறிவிக்கிறது.

"ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்..... அதின் பாதைகளெல்லாம் சமாதானம், அது தன்னை அடைந்தவர்களுக்கு ஜீவவிருட்சம், அதைப் பற்றிக்கொள்ளுகிற எவனும் பாக்கியவான்." (நீதி 3:13-18)

வேதத்தின் ஞானத்தையும், அதிலுள்ள ஜீவ வார்த்தைகளையும் கட்டி அணைப்பவர்கள், ஜீவனை கட்டி அணைக்கிறார்கள். இதை விட்டுவிடுகிறவர்கள் மரணத்தை தழுவுகிறார்கள்.

"நீங்கள் புத்தியைக் கேட்டு, ஞானமடையுங்கள், அதை விட்டு விலகாதிருங்கள். என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான். என்னைக் கண்டடைகிறவன் ஜீவனைக் கண்டடைகிறான், கர்த்தரிடத்தில் தயவையும் பெறுவான். எனக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனோ, தன் ஆத்துமாவைச் சேதப்படுத்துகிறான், என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள் என்று சொல்லுகிறது. (நீதி 8: 33-36)

## தேவனுடைய வார்த்தை

தேவன் ஒருவர் இருக்கிறார். வேதம் தேவனுடைய வார்த்தை. இது ஜீவனுள்ள தேவனுடைய "ஞானம்". சகல சிருஷ்டிப்புகளுக்கும் இவரே பரம தந்தை. (ஆதி 1:1-27, ஏசா 42: 5, 45:12) மனுக்குலத்திற்கு அவருடைய சிருஷ்டிப்பை பற்றி அறிவிக்கக்கூடிய ஒரே தூண்டுதலும், அவருடைய நேசிக்கப்பட்ட சிருஷ்டிப்புகளோடு அவரே சகலத்திலும் சகலமாயிருப்பவர் என்ற இறுதியான அவருடைய நோக்கத்தையும் அறிவிப்பதும் - வேதம் என்ற பதிவு மட்டுமே. (1கொரி 15:28)

இவைகள் பல்வேறு தனிநபர்களால் எழுதப்பட்டிருப்பினும், வேதத்தில் உள்ள கருத்துக்கள் எங்கும் வித்தியாசப்படுவதில்லை. ஏனெனில், வேதத்தின் நூலாசிரியர் - பிதாவாகிய தேவனே. ஆகவே வேதத்தில் உள்ள பகுதிகள் ஒரு முழுமையான காரியத்தையே வலியுருத்துகிறது. அல்லது ஒவ்வொரு தனி பகுதிகளையும் இந்த முழு சத்தியத்தின் வெளிச்சம் வீசப்படுகிறது. "யுகங்களைப் பற்றி அவருடைய ஏற்பாடுகளின் " மூலம் அவருடைய மகத்துவமான அன்பு, மற்றும் இரட்சிப்பின் திட்டத்தை வெளிப்படுத்தி "தேவன் அன்புள்ளவர்" என்ற ஒரே நோக்கத்தை இது பிரதிபலிக்கிறது. (1யோவான் 4:8,16 எபேசி 3:10,11)

"சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள்; இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்." (கலா 5:13)

"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன். " (யோவான் 17:3)

வேதம் (பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு) முழுமையானது. மற்ற எந்த தேவர்களுக்கும், மதங்களுக்கும், நித்திய ஜீவனை பெறுவதற்கான எந்த வழிகளுக்கும் இந்த வேதம் இடம் கொடுப்பதில்லை. வேதத்தில் சொல்லப்பட்ட யாவே தேவன் மட்டுமே உண்மையான ஒரே கடவுள், அவரே சகலத்தையும் சிருஷ்டித்தவர்.

"நீர் ஒருவரே கர்த்தர், நீர் வானங்களையும், வானாதி வானங்களையும், அவைகளுடைய சர்வ சேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர், அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர், வானசேனைகள் உம்மைப் பணிந்துக்கொள்ளுகிறது. " (நெகேமியா 9:6)

"நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (1தீமோ 1:17)

## தீர்க்கதரிசனத்தில் இன்று

# புகழ்பெற்றவர்களின் மரணங்கள்

2009 வருடமானது அநேக புகழ் வாய்ந்த தனிநபர்களின் மரணத்தை கண்டிருக்கிறது. இதில் நீண்ட காலமாக ஒலிப்பரப்பாளராக இருந்த வால்ட்டர் குரோன்கைட்டு என்பவர் தன்னுடைய 92வது வயதில் இயற்கை மரணம் அடைந்தார். மேலும், முன்னால் தேசிய கால்பந்தாட்ட வீரராகிய ஸ்டீவ் மெக்நாயர் தன்னுடைய 36வது வயதில் கொல்லப்பட்டார். மற்றும் தொலைக்காட்சியில் பணிபுரிந்த பில்லி மேஸ், நடிகர் காரல் மால்டன், ஹார்வ் பிரன்செல் மற்றும் டேவிட் காராடைன். மேலும், பாடகர்களான கோர்டன் வோலர், டைவய் மார்டீன் மற்றும் நகைச்சுவை நடிகன் பிரடு டிராவாலேனா. ஆனாலும், பாடகரும், அனைவரையும் மகிழ்விக்கிறவருமான மைக்கேல் ஜாக்ஸனின் மரணம் பெற்ற விமர்சனத்தை போல எவரும் பெற வில்லை.

ஜாக்ஸனின் மரணம் சகல ஒளிப்பரப்பாளர்களுக்கும் ஒரு மைய்ய கருப்பொருளானது. இவருக்காக உலகத்தில் சுமார் பதினேழாயிரம் பேர்கள் நினைவஞ்சலியை அனுசரித்தார்கள். அவர்களோடு மைக்கேல் இருந்தது போல அனைவரும் துக்கித்து அழுதார்கள். இப்போது மைக்கேல் மற்ற பாடகர்களுடன் இணைந்து தூதர்களை மகிழ்விக்கிறதாக சிலர் கூறுகின்றனர். "மைக்கேல் ஜாக்ஸன் மனம்வருந்தி, இயேசு கிறிஸ்துவை விசுவாசியாமல் போனால், தேவனுடைய கோபாக்கினைக்கு உட்பட்டு நித்தியமான நரகத்தில் உபத்திரவப்படுவார்" என்று ஒரு இரக்கமற்ற விமர்சகர் கூறியிருக்கிறார்.

மரணத்திற்கு பின் நடப்பவைகளைக் குறித்து மதங்கள் என்ன போதிக்கிறது

1972 மற்றும் 1982 ம் வருடங்களுக்கு இடையில் "Roper Center for Public Opinion Research" அமெரிக்காவில் உள்ள பொது ஜனங்களிடம் - "மரணத்திற்கு பின் ஜீவன் உண்டா ? " என்ற கேள்வியை எழுப்பியது. 70 % ஜனங்கள் மரணத்திற்கு பின் ஜீவன் உண்டு என்று நம்பினார்கள். 20% ஜனங்கள் அதை நம்ப மறுத்தார்கள். 1996ம் வருடம் " Roper Center" அதே கேள்வியை எழுப்பிய போது, 73 % ஜனங்கள் அதை நம்பினார்கள். 16%ஜனங்கள் அதை மறுத்தார்கள். 2002 ல் சிக்காகோ பல்கலைகழகத்தில் தேசிய ஆய்வு மையம் ஒரு வாக்கெண்ணிக்கையை நடத்திய போது இதே பதில்கள் வெளிப்பட்டது. ஒரு பெரும்பான்மையான அமெரிக்க வாசிகள் மரணத்திற்கு பின் ஜீவன் இருப்பதை சுமார் முப்பது வருடங்களாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாக காட்டப்படுகிறது.

2005 ம் வருடம் அக்டோபர் மாதம், மரணத்திற்கு பின் ஜீவனைக் குறித்து அமெரிக்க வாசிகள் என்ன கூறுகிறார்கள் என்று அறிய CBS செய்தியாளர்கள் ஒரு வாக்கெண்ணிக்கையை நடத்தினார்கள். மத சம்மந்தப்பட்ட கூட்டங்களில் கலந்துக்கொள்பவர்களில் பத்தில், ஒன்பது பேர்கள் மனிதன் மரணத்திற்கு பின் அவன் உருமாறுகிறான் என்று நம்பினார்கள்.

இதுபோல காலமைப்பு "மரணத்திற்கு பின் சேரும் இடம்" பற்றிய காரியத்தைக் குறித்து வாக்கெண்ணிக்கையை நடத்திய போது அநேக அமெரிக்கர்கள் - நல்லபடியாக வாழ்ந்த மக்கள், மரணத்திற்கு பின் நித்தியமாக பரலோகத்தில் வாழ்கிறார்கள் என்றும் மனந்திருந்தாத பாவிகள் நித்தியமாக தண்டனையை அனுபவிப்பதற்கு நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள் என்று தங்களுடைய நம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள். 1997 - 2004 வரைக்கும் கால வாக்கெண்ணிக்கையில் பெரும்பாலானவர்கள், அதவாது 1997ல் - 72% மற்றும் 2004ல் - 81% ஜனங்கள் பரலோக நம்பிக்கையை ஆதாரங்களோடு நம்பினார்கள். 2004ல் 10% ஜனங்கள் பரலோகத்தை குறித்த சந்தேகத்திலிருந்தார்கள். 8% ஜனங்கள் அதை நம்பவில்லை. கூடுதலாக, 1997- 56% மற்றும் 2004 - 70% ஜனங்கள் ஆதாரத்தோடு மரணத்திற்கு பின் சிலர் நிச்சயமாக நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்று நம்பினார்கள். 2004ல் 12% ஜனங்கள் நரகம் இருப்பதை சந்தேகித்தார்கள், 17% ஜனங்கள் அதை நம்பவில்லை.

ஒரு மனிதன் மரித்தால் அவனுடைய தனிமனித சிறப்பு உடனே மரித்தோரின் இராஜ்யத்திற்கு போய்விடுவான் என்று பழங்காலத்து எகிப்தியர்கள் நம்பினார்கள். அவன் போனதற்கு பதிலாக அவனுடைய சிலையை அவனுடைய கல்லறையில் வைப்பது வழக்கம். அவனுடைய பிரேதத்தை மம்மியாக பாடம் பண்ணி வைத்தால் மட்டுமே அவன் மீண்டும் உயிர்ப்பெறுவான் என்றும் நம்பினார்கள். எகிப்திய மரித்தோரின் புத்தகத்தோடு, உணவு, நகைகள், மற்றும் அவர் உபயோக படுத்தின பொருட்களும் அந்த கல்லறையில் வைக்கப்பட்டது.

ரோமர்கள் கிரேக்கர்களிடமிருந்து சில நம்பிக்கைகளை எடுத்துக்கொண்டனர். மரணத்திற்கு பின் ஒரு பேரின்ப வாழ்வு இருக்கிறது என்றும், ஆனால் அந்த ஸ்தலம் சீயஸ் என்ற தேவதையின் வம்சத்திற்க்காக ஒதுக்கி

வைக்கப்பட்டிருக்கிறது என்று கிரேக்க கவிஞரான ஹோமர் விவரிக்கிறார். மரணத்திற்கு பின் பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கும் அநேக ஆத்துமாக்களை ஹெடஸ் என்ற தெய்வம் ஆண்டுகொண்டிருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். "ஹெடஸ்" என்ற வார்த்தை சித்திரவதைக்கும், இளைப்பாறுதலுக்கும் இடையில் உள்ள நிலையை விவரிக்கிறதற்கு பொதுவாக பயன்பட்டது.

வேதாகமம், மரணம் மற்றும் மரணத்திற்கு பின் ஜீவன்

மரணத்திற்கு பின் உள்ள நிலைமையை குறித்து அநேக கருத்துக்களும், வேறுபாடுகளும், வாக்குவாதங்கள் இருப்பினும், இதைக் குறித்து வேதாகமம் மிக தெளிவாக உள்ளது. மரணம் மிக பெரிய சத்துரு என்றும் "மரணமும் இல்லை" என்ற காலம் இனி வருவதாகவும், மரித்த அனைவரும் மீண்டும் ஜீவனை பெறுவார்கள் என்றும் வேதம் சொல்லுகிறது. (வெளி 21:4, யோவான் 5:28). முதல் மனிதனாகிய ஆதாமை தேவன் பாவமில்லாமல் சிருஷ்டித்தார். தன்னுடைய சிருஷ்டிகருக்கு கீழ்ப்படிந்து வாழும் பட்சத்தில், அவர் நித்தியமாக ஜீவிக்க தேவன் வாய்ப்பளித்திருந்தார்.

"... நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம், அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று..." (ஆதி 2:17)தேவன் ஆதாமிடம் கூறினார். "நீங்கள் நித்தியமான ஆக்கினையை நரகத்தில் பெறுவீர்கள் " என்று தேவன் ஒருபோதும் சொல்லவில்லை. ஆதாமின் கீழ்படியாமை மரணத்தை விளைவித்தது, அந்நாள் முதல் அவருடைய சந்ததிகள் அனைவரும் மரண நிலையில் பிறந்தார்கள்.

தேவனுடைய வார்த்தையில் மரணம் என்பது என்ன ? ஜீவனை இழப்பது, சரீரம் மக்கி, தான் எடுக்கப்பட்ட மண்ணுக்கே மீண்டும் திரும்புவதாகும். "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய், நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே" (பிரச 9:10) தெய்வீக செயல்பாடு இல்லாவிட்டால், ஒரு மனிதனின் மரணத்திற்கு பின் எல்லாம் முடிந்திருக்கும்.

மனுக்குலத்திற்கு மரணத்திற்கு பின் ஜீவன் என்ற ஒரே நம்பிக்கை மரித்தோரிலிருந்து "உயிர்த்தெழுதல்" என்பதை சார்ந்து இருக்கிறது. ஒரு மனுஷனை மறுபடியும் சிருஷ்டிப்பதே "உயிர்த்தெழுதலாகும்". ஒரு புதிய சரீரத்திற்குள் பழைய சிந்தை மற்றும் குணங்களை பொருத்தி, புத்துயிர் அளித்து அதை ஜீவிக்கசெய்வதாகும். சில நேரங்களில் புதுப்பித்தால் மட்டும் போதும் என்று கருதப்படுகிறது. ஆனால் பல வருடங்களுக்குமுன் மரித்த மனிதனுடைய சரீரம் முழுமையாக மக்கி பூமியின் தாதுக்களாக கரைந்திருக்கும்.

கல்லறையிலிருந்து விடுவிக்க தேவன் ஒருவருக்கு மட்டுமே வல்லமை இருக்கிறது. ஆகவே தான் வருங்கால ஜீவன், "உயிர்த்தெழுதல்" என்னும் கதவின் வழியாக மட்டுமே நுழைய முடியும் என்று வசனங்கள் வலியுருத்துகிறது.

"இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம், ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்..."(யோவான் 5:28-29) என்று வெளிப்படையாக இயேசு சொன்னார். லாசரு மற்றும் மரியாளின் சகோதிரியான மார்த்தாள், பூர்வீக இஸ்ரயேலர்களின் நம்பிக்கையும் இதுவே என்று வலியுருத்தியும், இந்த கருத்தை மறுபடியும் இயேசுவினிடம் திரும்பச் சொன்னாள் -"...உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள்."

ஆதாம் மற்றும் அவருடையசந்ததியான முழு மனுக்குலத்தை மீட்க இயேசு தாமே அவருடைய ஜீவனை விலைக்கிரயமாக கொடுத்ததினால் மரணத்திற்கு பின் நிச்சயமாக ஜீவன் உண்டு. சுவிசேஷ யுகம் என்று அழைக்கப்படும் இந்த காலத்தில், இயேசுவை பின் பற்றக்கூடிய உடன்படிக்கை செய்த விசுவாசமுள்ள சீஷர்களுக்கு பரலோக பரிசு காத்திருக்கிறது. ஆனால் இப்போது உயிரோடிருப்பவர்களும், மரித்தோரிலிருந்து எழுந்தவர்களும், உயிர்த்தெழுதலின் காலத்தில் இயேசுவை அறிந்து அவரை ஏற்றுக் கொண்டபின் வாக்களிக்கப்பட்ட நித்திய ஜீவனை இயேசு நமக்கு ஜெபிக்க கற்று க்கொடுத்த ஜெபத்தில் - "உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" - (மத் 6 :10) என்று ஆசீர்வதிக்கப்பட்ட தேவனுடைய இராஜ்யத்தில் நித்தியமாக பெறுவார்கள்.